முருகப்பெருமான் துணை

**மகான் கடைப்பிள்ளைசித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.10.2022**, வியாழக்கிழமை

1. தருமபலம் கொண்ட ஞானியே
   தவசியாக வாழும் அரங்கனே
   பெருமை மிக்க தொண்டர் படைகளை
   பேருலகம் எங்கிலும் படைக்கும் வண்ணம்
2. வண்ணமுடன் அவதாரம் எடுத்து
   வரம்பல தந்தருளும் தேசிகனே
   மண்ணுலகில் உன் பெருமை கூறி
   மார்க்கமுள சுபகிருது தரிவை திங்கள்
3. திங்களிலே மூவாறோர் திகதி குருவாரம்
   **(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 19 ம் நாள், 06.10.2022 வியாழக்கிழமை)**
   தேசிகனுக்கு அனுகூல ஆசிதனை
   இங்கனமே கடைப்பிள்ளைச்சித்தர் யானும்
   இயம்பிடுவேன் உலகநலம் பெற
4. நலம்தரும் ஞானிகள் திருவடியை
   நம்பிக்கை வைத்து மக்கள் தானும்
   வலம் வந்து வணங்கி வர
   வரங்களெல்லாம் கேட்ட வண்ணம்
5. வண்ணமுடன் அனுகூலமாகி நன்கு
   வாழுகின்ற காலமே அவரவர்க்கும்
   எண்ணம் வழி சித்திகள் கூடி
   ஏற்றமான வாழ்வாக மாறும்
6. மாறுதலை தரும் மகா சக்தியாக
   மாதவசியாக வந்த அரங்கன்
   ஆறுதலும் அருளும் அனுகூலமும்
   அனுகிப் பெற்ற மக்களுக்கு
7. மக்களுக்கு மரணமல்லல் விலகும்
   மறுமை எனும் பிறப்பும் அகன்று
   ஆக்கமுடன் ஞான பலமும்
   அகிலமதில் ஞானிகள் ஆகும் வாய்ப்பும்
8. வாய்ப்பும் பெருகி கலியினில்
   வருகின்ற அரங்கன் வழி மக்களுக்கு
   அய்யமற சர்வபலமும் கிட்டி
   ஆறுமுகனார் காட்சி எனும் சூட்சுமம்
9. சூட்சுமம் அரங்கன் மூலம் கிட்டி
   சுத்த சைவ நெறி அகலா
   மாட்சிமைபட வாழும் வண்ணம்
   மகத்துவம் பெருகி சிறப்பர்

10. சிறப்பான ஞானவான்கள் படை
செகமெல்லாம் பரவி நின்று
மறுப்பின்றி அகிலம் மாற்றும்
மகான்கள் தலைமை படைக்கும்

11. படைக்கும் வண்ணம் சூழல் ஆற்றி
பண்புமிக்க ஞான ஆட்சி
தடையின்றி அரங்கனால் அமையும்
தாமுரைத்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–